## தொடர்ந்து முதல் 10 இடங்களில் நீடிப்பு

# தரவரிசை பட்டியலில் இடம் சாய்ராம் கல்லூரி பெருமிதம்

சென்னை, மே 27: அண்ணா பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள பொறியியல் கல்லூரிகளின் தரவரிசை பட்டியலில் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து முதல் 10 இடங்களில் இடம் பெற்று வருகிறது.

இதுகுறித்து, சாய்ராம் கல்வி குழும தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து கூறியதாவது:

அண்ணா பல்கலைக் கழகம் கடந்த 2005ம் ஆண்டு முதல் கல்லூரிகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டு வருகிறது. இவ்வாறு அண்ணா பல்கலைக்கழகம் தரவரிசை பட்டியலை வெளியிடும் போதெல்லாம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீ சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்வி நிறுவனங்கள் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்து வருகிறது.

இது, எங்கள் கல்லூரியின் தரத்தை வெளிப்படையாக காட்டுகிறது. எங்கள் கல்லூரியில் 15 மாணவருக்கு ஒரு ஆசிரியரை நியமித்திருக்கிறோம்.

இந்த ஆசிரியர் அந்த மாணவர்களின் படிப்பு, மாணவர்களின் தேவைகள், மாணவர்கள் சந்திக்கும் பிரச்னைகளை கண்டறிந்து நிவர்த்தி செய்கின்றனர். ஆசிரியர்களால் தீர்க்க முடியாத பிரச்னைகள் ஏதும் இருப்பின் நிர்வாகத்தில் தீர்க்கப்படும். இதனால் மாணவன் எந்த கவலையும் இல்லாமல் சீரான மனநிலையில் இருப்பார். இது, அவர்களின் கல்வியை மேம்படுத்த உதவுகிறது.

அதே போல, அண்ணா பல்கலைக்கழகம் வழங்கும் பாடத்திட்டத்துடன் கூடுதலாக நாங்கள் சில பயிற்சி வகுப்புகளை நடத்துகிறோம். இது மாணவர்களின் பொது அறிவையும், ஆங்கில அறிவையும் மேம்படுத்துவதாக அமைகிறது. அதேபோல, பல்கலைக்கழக தேர்வுகளில் 85 சதவீதத்துக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு உதவி தொகை வழங்குவதுடன், 90 சதவீதத்துக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு டியூஷன் கட்டணம் பெறுவதில்லை. எங்கள் கல்லூரியில் இந்த சாதனைக்கு ஆசிரியர்களின் பங்கு மகத்தானது.

இவ்வாறு அவர் கூறினார்.